# Tnpsc Group 4 General Tamil Model Test - Part 5

More Pdf Link: https://wp.me/p7JanY-cpU

## 6th Tamil Unit 1 Questions

81. தொலைவில் உள்ள பொருளின் உருவத்தை அருகில் தோன்றச் செய்ய முடியும். அறிவியல் அறிஞர் கலீலியோ நிறுவிய கருத்து இது. இக்கருத்து திருவள்ளுவமாலை என்னும் நூலில் __________ எழுதிய பாடலில் இடம்பெற்றுள்ளது.

A) நல்லாதனார்

**B) கபிலர்**

C) தொல்காப்பியர்

D) மாணிக்க வாசகர்

82. நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின் – என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

A) நற்றிணை

B) பதிற்றுப்பத்து

**C) தொல்காப்பியம்**

D) கார்நாற்பது

83. கடல்நீர் முகந்த கமஞ்சூழ் எழிலி – என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

A) நற்றிணை

B) பதிற்றுப்பத்து

C) தொல்காப்பியம்

**D) கார்நாற்பது**

84. கோட்சுறா எறிந்தெனச் சுருங்கிய நரம்பின் முடிமுதிர் பரதவர் – என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

**A) நற்றிணை**

B) பதிற்றுப்பத்து

C) தொல்காப்பியம்

D) கார்நாற்பது

85. தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட பனையளவு காட்டும் – என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

A) நற்றிணை

B) பதிற்றுப்பத்து

**C) திருவள்ளுவமாலை**

D) கார்நாற்பது

86. தமிழ் மொழியின் இலக்கண வகைகள் ____________.

A) 4

**B) 5**

C) 6

winmeen.com

D) 7

**(குறிப்பு – தமிழ் மொழியின் இலக்கண வகைகள் ஐந்து. எழுத்து இலக்கணம், சொல் இலக்கணம், பொருள் இலக்கணம், யாப்பு இலக்கணம், அணி இலக்கணம் )**

87. _________________ என்பது இங்குக் கால அளவைக் குறிக்கிறது.

A) ஒலிப்பு

**B) மாத்திரை**

C) வடிவம்

D) நேரம்

**(குறிப்பு – மாத்திரை என்பது இங்குக் கால அளவைக் குறிக்கிறது. ஒரு மாத்திரை என்பது ஒருமுறை கண் இமைக்கவோ ஒருமுறை கைநொடிக்கவோ ஆகும் கால அளவாகும். குறில் எழுத்தை ஒலிக்கும் காலஅளவு – 1 மாத்திரை. நெடில் எழுத்தை ஒலிக்கும் காலஅளவு – 2 மாத்திரை)**

88. மெய் எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு?

A) கால் மாத்திரை

**B) அரை மாத்திரை**

C) ஒரு மாத்திரை

D) இரண்டு மாத்திரை

89. ஆய்த எழுத்தை ஒலிக்க ஆகும் கால அளவு?

A) கால் மாத்திரை

**B) அரை மாத்திரை**

C) ஒரு மாத்திரை

D) இரண்டு மாத்திரை

90. கபிலர் – என்னும் பெயரில் உள்ள மாத்திரை அளவைக் கண்டுபிடி?

A) 2

B) 2.5

C) 3

**D) 3.5**

91. கலைச் சொல் அறிவோம் – சரியானது எது?

I. குரல்தேடல் – Voice Search

II. இணையம் – Internet

III. இடஞ்சுழி – Anti Clock wise

IV. வலஞ்சுழி – Clock wise

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

92. கலைச் சொல் அறிவோம் – சரியானது எது?

I. செயலி – App

II. முகநூல் – Facebook

III. தொடுதிரை – Touch Screen

IV. தேடுபொறி – Search engine

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

93. கலைச் சொல் அறிவோம் – சரியானது எது?

I. புலனம் – Whatsapp

II. மின்னஞ்சல் – E–mail

III. தொடுதிரை – Touch Screen

IV. தேடுபொறி – Search engine

A) I, II மட்டும் சரி

**B) I, II, III, IV அனைத்தும் சரி**

C) III, IV மட்டும் சரி

D) II, III மட்டும் சரி

94. பொருத்துக:

I. இலக்கண நூல்கள் – தொல்காப்பியம், நன்னூல்

II. சங்க இலக்கியம் – எட்டுத்தொகை, பத்துப்பாட்டு

III. அறநூல்கள் – நாலடியார், திருக்குறள்

IV. காப்பியங்கள் – சிலப்பதிகாரம், மணிமேகலை

A) I, II மட்டும் சரி

**B) I, II, III, IV அனைத்தும் சரி**

C) III, IV மட்டும் சரி

D) II, III மட்டும் சரி

winmeen.com